2012 நவம்பர் 2] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

உறுதிமொழிக் குழுவின் தலைவராகப் பணியாற்றிட நல்வாய்ப்பு வழங்கியிருக்கின்ற கருணையின் பிறப்பிடமே, அன்பின் திருவுருவமே, ஆற்றலின் இருப்பிடமே, வீரத்தின் விளை நிலமே, வெற்றியின் விலாசமே, உலகத்தை ஆளுகின்ற ஆற்றல் கொண்டிருக்கும் இந்தியத் திருநாட்டின் வழிகாட்டியே, வாழும் மனித தெய்வமே, தங்களின் பொற்பாதம் பணிந்து வணங்கி, கோடானு கோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, 2012-2013 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதி மொழிக் குழுவின் 35 முதல் 39 வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

(ச) மனுக்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மனுக்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா டாக்டர் வைகைச்செல்வன், மனுக்கள் குழுவின் தலைவர் அவர்கள்.

***டாக்டர் வைகைச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு என்றால் அன்பு என்று பொருள். அன்பு என்றால் அம்மா என்று பொருள். அம்மாவை அம்மா என்று அழைக்கலாம். அம்மாவைக் கடவுள் என்றும் அழைக்கலாம். அந்தக் கடவுளாக இருக்கின்ற எங்கள் அன்னையே, நட்பின் இலக்கணத்தை வரையறை செய்ய வேண்டுமென்று கேட்டபோது, நட்பை நகமும் சதையும் என்று வரையறை செய்தார்கள். ஒரு நண்பர் கேட்டார். நட்பை நகமும் சதையும் என்று சொன்னாயே, ஆகவேதான் நான் வளர, வளர-நகம் வளர, வளர வெட்டிவிடுகின்றாயோ என்று சொன்னாராம். ஆக, இப்படிப்பட்டவர்கள் வாழுகின்ற உலகில் நாதியற்றோருக்கும், நலிந்தோருக்கும், கண்ணீரோடும், கவலையோடும், காலத்தாலும், கொண்ட கோலத்தாலும், சீலத்தாலும், பாதிக்கப்பட்டவர்களுக்கும், வேதனையாலும், துன்பத்தாலும் துவண்டு கொண்டிருக்கின்றவர்களையும், கரை சேர்க்கின்ற கலங்கரைவிளக்கமாக, கடவுளாக விளங்குகின்ற எங்கள் அன்னையே, இந்தியாவின் பிரதமராகப் பணியாற்றக் கூடியவர், தமிழகத்தின் முதல்வராகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார் என்கின்ற தகுதியும், மிகுதியும் படைத்து, ஆனை, சேனை, ஆள், அம்பு, கோட்டைக் கொத்தளத்தில் தர்பார் மண்டபத்தில் கோலோச்சிக் கொண்டிருக்கிற மாண்புமை பொருந்திய தமிழ்நாடு

[டாக்டர் வைகைச்செல்வன்] [2012 நவம்பர் 2

அரசின் முதலமைச்சர், எங்கள் நாடி நரம்பில், ஊனில், உணர்வில், உதிரத்தில் கலந்திட்ட உயரனையத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எளியவன், அடியவன், எம்பொருட்டும் அரசின் தலைமைக் கொறடாவாகவும், மனுக்கள் குழுவின் தலைவராகவும் பணியாற்றக்கூடிய உயர்ந்த சந்தர்ப்பத்தை உருவாக்கித் தந்திருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய பாதங்களில் என் நன்றி மலர்களைக் காணிக்கை ஆக்குகிறேன். அம்மாவின் பாதங்களில் என் நன்றிக் கண்ணீரை நனைக்கின்றேன். அதைச் செந்நீரால் துடைக்கின்றேன். மாண்புமிகு அம்மா அவர்கள் நடந்து செல்கிற பாதையில் கிடக்கின்ற மண்ணே எங்களுக்கு திருநீறு. அம்மா அவர்கள் கால் பதிக்கிற இடம்தான் எங்களுக்கு கைலாயம் என்று சொல்லி, அம்மாவை வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மனுக்கள் குழுவின் 2012-2013 ஆம் ஆண்டுக்கான 13 முதல் 15 வரையிலான 3 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

பிற்பகல் 12-40

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2012

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.